**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**பல்கலைக்கழக அனுமதிகள் - கல்வி ஆண்டு 2020/2021**
**நுண்கலைமாணி (கட்புல தொழில்நுட்ப கலைத்துறை) பட்டப்படிப்பிற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சை**

**மாணவர்களுக்கான பொதுவான அறிவுறுத்தல்கள்**

1. குறைந்தபட்சம் மாணவர்கள் SMART கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்த வேண்டும். இருப்பினும் கையேட்டுக்கணனி (Tablet), கையடக்க இசைக்கேளி (IPad) இருப்பின் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தலாம்.

2. சகல மாணவர்களும் தத்தமது பாடங்களுக்குரிய செயன் முறைவிளக்கக் காணொளியை நிறுவக இணையத்தளத்தில் பார்வையிட வேண்டும்.

3. Audio, Video, இணையம் என்பன தடங்கல் இல்லாத இடத்தினைத் தெரிவுசெய்து, அவ்விடம் பரீட்சைக்குப் பொருத்தமானதா என்பதை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4. மாணவர்கள் அனைவரும் தங்கள் தேசிய அடையாள அட்டையுடன் தோன்றி, பரீட்சகரிடம் தங்கள் முகத்தை தெளிவாகத் தெரியும் வண்ணம் காண்பிப்பதன் மூலம் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

5. கிடைத்தள நிலையில் (Land scape) பொருத்தமான பின்னணிச் சூழலில் தம்மை அடையாளப்படுத்தும் வகையில் தரப்படுகின்ற Zoom இணைப்பினூடாக இணைந்து கொள்ளல் வேண்டும்.

6. தங்களது செயன்முறையினை படமெடுப்பதற்கு ஒரு உதவியாளரை வைத்துக்கொள்வது விரும்பத்தக்கது.

7. மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் ஆற்றுகைகள், செயன்முறைகளை இடைவிடாது தொடர்ச்சியாக ஆற்றவேண்டும்.

8. தொழில் நுட்பப் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து உடனடியாக **sar_exam_svias@esn.ac.lk** என்ற மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது 065-2222663 / 0777883229 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>விசேட அறிவுறுத்தல்கள்</u>

1. கட்புல தொழில்துட்பத்துறை மாணவர்களுக்கான செயல்முறை ஒளிப்பட மாதிரியை எமது இணையத் தளத்தில் பார்வையிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

2. இச் செயல் முறைப் பரீட்சையானது 15 நிமிட அளவு நேரத்தைக் கொண்டதாக இருக்கும்.

3. உங்களுக்குத் தரப்பட்ட காலஅட்டவணையின் பிரகாரம் அரைமணித்தியாலத்துக்கு முன்பாக தரப்பட்ட மெய்நிகர் செலிக்குள் (Zoom) நுழைதல் வேண்டும்.

4. மாணவர்கள் அனைவரும் ஒழுக்கமான ஆடை அணிந்திருத்தல் வேண்டும்.

5. பரீட்சை நடைபெறும் போது மேற்பார்வையாளர் உங்களை அவதானித்துக் கொண்டிருப்பார். அதனால் உங்கள் ஒளிப்படத்தை நிறுத்தாமல் பரீட்சை முடியும் வரை இயக்கத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

6. பரீட்சைக்குச் தோன்றும் போது மாணவர்கள் வைத்திருக்க வேண்டியவை.

   i. White paper A3 size
   ii. Pencil 2B, 4B
   iii. Eraser
   iv. Drawing Board 1.5 feet X 1.5 feet
   v. Drawing Board Clip – 4

7. பின்வரும் விடயங்கள் தங்கள் செயல்முறையில் கவனத்தில் கொள்ளப்படும்.

   1. சுதந்திர வரைதல் திறன் (Free hand drawing)
   2. அளவுப் பிரமாணம் (Proportion)
   3. ஒளிநிழல் படுத்துகை (Light and Shading)
   4. உருவத்தொகுப்பு (Composition)